வருவாயைப் பெருக்குகின்ற செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது, அது குறித்து என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள பிரச்சினைக்கும், திருச்சியிலே உள்ள பிரச்சினைக்கும் சற்று வேறுபாடு உள்ளது. மதுரையிலே குளத்திலே தண்ணீரே இல்லை. ஆனால் திருச்சியிலே உள்ள குளத்திலே அதிகமான தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. தெப்பத் திருவிழா அங்கே நடத்த முடியும். ஆகவே அங்கே குளக் கரையில் குளத்திற்குள்ளே அங்காடிகள், கடைகள் கட்டுகின்ற பிரச்சினை எழவில்லை. இருந்தாலும் குளக் கரையில் அந்தக் கடைகளை வைப்பதால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அந்தக் கோவிலில் இருக்கக் கூடிய அறக்காவலர்கள் அண்ணா தி. மு. க. கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். அங்கே உள்ள நகராட்சியை அணுகி அந்தக் கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குதல்.

*2954 திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

9–45 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம் சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்தேரி என்பது 4,000 அடிக்கு மேலே இருக்கிற ஒரு உயரமான மலைப்பகுதி. 48 கிராமங்களைக் கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதிகளிலே, வனத்துறை

மூலம் சாலைகளை அமைத்து, அங்கே கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான சந்தன மரங்கள் களவு போயிருப்பதைத் தடுத்து, அந்த இடங்களில் எல்லாம் வனவளத்தைப் பெருக்குகின்ற முறையில் என்னென்ன திட்டங்கள் நடைமுறைப் படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சித்தேரி சந்தன மலை, அந்த வனக் காப்பு பகுதி, ஏற்கெனவே, ' சேன்டல்வுட் சுங்கவரி ' என்ற அளவிலே சந்தன வன பாதுகாப்புப் பகுதி என்ற அளவிலே அது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே ஏறத்தாழ ஆயிரம் ஹெக்டர் பரப்பிலே சந்தன மரங்களை வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்துவதற்கான திட்டம் இருக்கின்றது. கடந்த ஆண்டிலே 1989-90-ஆம் ஆண்டிலே இதற்காக ரூ. 1,53,000 செலவிடப்பட்டிருக்கின்றது. தனியார் காடுகளிலே உள்ள சந்தன மரம் முழுவதும் அரசுக்குச் சொந்தமானது என்ற ஒரு நிலை இருந்தாலும், தனியார் நிலங்களிலே வளர்ந்திருக்கக் கூடிய சந்தன மரத்திற்கு ஓரளவு, அந்த மரத்தினுடைய மதிப்பில் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. ஆகவே ஆண்டு ஒன்றுக்கு ஒரு மரத்திற்கு 10 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை இன்னும் கூட்ட முடியுமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இறுதியிலே வெட்டுகின்ற பொழுது அந்த மரத்தினுடைய மதிப்பிலே ஒரு பகுதியை அந்த தோட்டச் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டும் என்ற அளவிலே இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை அந்த பகுதியிலே அரசு வனத்துறை செயல்படுத்தி வருகின்றது.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, இப்படி அரசு ஒரு பகுதியிலே வனவளத்தைப் பெருக்குகின்ற நேரத்தில் அங்கேயிருந்து ஏராளமான சந்தனக் கட்டைகள், கார்களிலும், லாரிகளிலும் கடத்தப்படுகின்றன. அந்த வண்டிகள் எல்லாம் பறிமுதல் செயயப்பட்டு வன இலாக்கா அலுவலகத்திலே கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன. ஆனால் வண்டிகள் ஆண்டு கணக்கிலே நிறுத்தப்படுகின்ற காரணத்தால் அதிலே இருக்கிற எஞ்சின், டயர் உட்பட எல்லாம் காணாமல் போகிறது. கடைசியிலே வெறும் தகரம் மட்டுமே மிஞ்சி இருக்கிறது. இப்படி அந்த வண்டிகள் கைப்பற்றப்பட்டவுடன் ஏலம் விடப்பட்டு அந்த பணம் அரசு கணக்கிலே வைக்கப்படுகிற அப்படிப்பட்ட நடைமுறையை தமிழக அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன். மலைப் பகுதியிலேயிருந்து கீழே இறங்குகிற மக்கள் அவசர கால உதவிக்கு கீழே நகரத்திற்கு வரமுடியாமல் ஆறு மணிக்கு மேல் ' செக் போஸ்ட் ' போட்டு எந்த வண்டியும் வராமல் தடுத்து விடுகிறார்கள். மருத்துவ வசதிக்காக அந்த

மலைவாழ் மக்கள் நிலப்பரப்புக்கு வர முடியாத சூழ் நிலையிருக்கிறது. எனவே, தனியாக ஒரு ஆள் போட்டு மருத்துவ வசதிக்காக அந்த மலைவாழ் மக்கள் கீழே வருவதற்கு வசதி உருவாக்கித் தருமா இந்த அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வெட்டிச் செல்வது, இந்தக் கொள்ளை , இப்பொழுது தமிழ்நாட்டு வனப் பகுதியிலே குறைந்திருக்கின்றது. வீரப்பனுடைய கொள்ளைக் கும்பல்தான் இந்தக் காரியத்திலே அதிகமாக ஈடுபட்டிருக்கின்றனர். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய காவல் துறையும், கர்நாடக மாநிலக் காவல் துறையும் ஒருங்கிணைந்து அந்த கொள்ளையனை பிடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்து அதை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். கூடிய விரைவிலேயே அந்தக் காரியம் நிறைவுறும் என்று நான் எதிர் பார்க்கிறேன். அதைத் தவிர இந்தக் கொள்ளைகளில் பிடிக்கப்படுகின்ற கார்களைப் பற்றி இங்கே சொன்னார்கள், ஏலம் விட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக ஒரு சட்டத் திருத்தம் தேவைப்படுகின்றது. இதை விரைவிலே நாங்கள் மத்திய அரசு அனுமதி பெற்று. கொண்டு வரவிருக்கிறோம் அதைப்போலவே பல்வேறு ஆயிரக்கணக்கான வழக்குகள், இந்த சந்தன மர வழக்குகள் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றன. இதற்காகவும் இந்த வழக்குகளை நடத்துவதற்கு மட்டுமாக திருப்பத்தூரிலே தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட இருக்கிறது.

9-50 மணி

திரு. எம். அண்ணாமலை ; துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்களுக்கு அந்த பட்டாதாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். சித்தேரி மலைப் பகுதிகளில் பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? மேலும் அந்த பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் பச்சை மரங்களே வனத்துறை அதிகாரிகளால் பறிக்கப்பட்டு பறிக்கப்பட்ட மரங்களுக்கு ரசீது கேட்டதற்காக அந்த மலைவாழ் மக்கள் தாக்கப்பட்டது என்பது போன்ற புகார் ஏதேனும் வந்ததா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இங்கே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முல்லைவேந்தன் அவர்கள் கேட்ட கேள்வியிலே ஒரு பகுதி விடப்பட்டது. அங்கே மலைவாழ் மக்கள் கீழே இறங்குகின்ற போது 6 மணிக்கு மேலே

1990 ஏப்ரல் 26]

மருத்துவ வசதிக்காக கீழே இறங்குகின்ற போது அந்த செக் போஸ்ட்டிலே ஆட்கள் இல்லாத காரணத்தினாலே சில சங்கடங்கள் வருவதாகச் சொன்னார்கள். அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது போல நம்முடைய அண்ண மலை அவர்கள் எழுப்பிய பிரச்சனையிலும் தனிப்பட்ட வர்களுக்குச் சொந்தமான நிலத்திலே பச்சை மரத்தையே வெட்டுகின்ற அளவிற்கு வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்றால் அது மாபெரும் குற்றம். அதைத் தடுப்பதற்கு வனத்துறை நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

கடைகள் கட்டுதல்

*2600 திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை பெரிய கடை வீதியில், கோனியம்மன் கோவிலுக்கு எதிரில் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதன் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன் கோவை மாநகராட்சியில் பெரிய கடை வீதியில் கோனியம்மன் கோவிலுக்கு எதிரில் (குரு ஓட்டல் அருகாமையில்) ''வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் கடைகள்'' கட்ட ரூ. 75 இலட்சம் கோவை மாநகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 30-9-1989-ல் அரசு நிதியுதவி செய்துள்ளது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பெரியகடை வீதியில் கோனியம்மன் கோவிலுக்கு எதிரிலே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டும் திட்டப் பணி எப்போது முடிவு அடையும், சுமார் எவ்வளவு கடைகள் கட்டப்பட இருக்கின்றன, பலமாடி கட்டிடங்களாக கட்டப்பட இருக்கிறதா என்பதையும், இதன் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டு வருமானம் சுமார் எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, 16,472 சதுர அடி இடத்தில் இந்தக் கடை கட்டப்பட இருக்கிறது. முதல் தளத்தில் 93 அறைகள அதிலே கட்டப்பட இருக்கின்றன. அதற்கு கீழ் வாகனங்கள் நிறுத்துவதற்கும் வசதி செய்யப்படவுள்ளது.

டி2 53-123—4